வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- நாராயணசாமி

தேதி 21.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக, 3 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார்.

இந்தியா-பிரேசில் இடையே, எரிசக்தித் துறையில்,பரஸ்பர ஒத்துழைப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு-ஒரே தேர்தல், காலத்தின் கட்டாயம் என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தினார்.

சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை ஒட்டி, புதுச்சேரி கடற்கரையில் நடைபெற்ற தூய்மைப் பணியை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார்.

------------------------------

*பிரதமர் 1 (18)*

விரிவான உலகளாவிய கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்துவற்கான புதிய பாதைகளை, இந்தியாவும், அமெரிக்காவும், மதிப்பாய்வு செய்து, அடையாளம் காணும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் வில்மிங்டனில் நடைபெற உள்ள 6ஆவது ஆண்டு குவாட் தலைவர்கள் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இன்று முதல், 3 நாள் பயணமாக, அமெரிக்கா புறப்பட்டுச் சென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி, தனது புறப்பாட்டுச் செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில், அமைதி, முன்னேற்றம், மற்றும் செழுமைக்காக பணியாற்றுவதற்கு, ஒருமித்த எண்ணம் கொண்ட நாடுகளின் முக்கிய குழுவாக குவாட் அமைப்பு உருவெடுத்திருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார். இந்த பயணத்தின் போது, முன்னதாக, அமெரிக்க அதிபர் ஜோ.பைடனை இன்றிரவு பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து, இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்த

உள்ளார். மேலும், ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஆண்டனி அல்பேனிஸ், மற்றும், ஜப்பானிய பிரதமர் திரு. ஃபுமியோ கிஷிடாவுடன் இருதரப்பு சந்திப்புகளையும் நடத்த இருக்கிறார்.

தொடர்ந்து, நியூயார்க் செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அங்குள்ள இந்திய சமூகத்தினருடன் உரையாட உள்ளார்.

*பிரதமர் 2 (9)*
அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் உயர் அதிகாரிகளையும் அவர் இந்த பயணத்தின் போது சந்திக்க இருக்கிறார். தமது அமெரிக்க பயணத்தின் 3ஆவது நாளில், நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் பொது சபையில், உலகின் எதிர்காலம் பற்றிய உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார். ஒரு சிறந்த நாளை காண பலதரப்புத் தீர்வுகள் என்னும் தலைப்பில் நடைபெற உள்ள இந்த உச்சி மாநாட்டில், மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான பாதையை, உலக சமூகத்தினரிடையே பட்டியலிட இதுவொரு வாய்ப்பாக அமையும் என பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

-----------------------------

*முர்மு* (8)

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தார் பகுதியில், மாவோயிஸ்ட் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களை, குயடிரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று புதுடெல்லியில், குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்து ஆறுதல் கூறினார். இதுகுறித்து, சமூக ஊடகப் பதிவில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எந்தவொரு நோக்கத்திற்காகவும், வன்முறையின் பாதையில் செல்வதை நியாயப்படுத்த முடியாது என்றும், தீவிரவாதிகள், வன்முறையை கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளார்.

-----------------------------

*தன்கர்* (8)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், யூனியன்பிரதேசமான, தாத்ரா, நாகர் ஹவேலியின் சில்வாசாவில் உள்ள நமோ மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுடன் இன்று கலந்துரையாடினார். தொடர்ந்து டையூவில் உள்ள பஞ்சாயத்து அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும், அவர் உரையாட உள்ளார். நாளை நடைபெற உள்ள நிகழ்ச்சியின் போது, கோக்லாவில், பிரதமர் வீட்டு வசதித் திட்ட குடியிருப்புகள், மற்றும், டையூவில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை திறந்து வைக்க உள்ளனர்.

-----------------------------

*ஹர்தீப் சிங் புரி* (8)

பிரேசில் நாட்டிற்கு 3 நாள் அரசு முறைப் பயணமாக சென்றுள்ள மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, இந்தியா-பிரேசில் இடையே எரிசக்தித் துறையில்,பரஸ்பர ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப் பட்டுள்ளதாக, தெரிவித்துள்ளார். அந்நாட்டு எரிசக்தித் துறை அமைச்சர் தி. அலெக்சாண்டர் சில்விராவுடன் நடந்த பேச்சு வார்த்தைக்கு பிறகு, இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், இருநாடுகளுக்கு இடையே உயிரி எரிபொருள் வர்த்தகத்தில் பரஸ்பர ஒத்துழைப்பு அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------------

*ஜம்மு தேர்தல்* (10)

ஜம்மு-காஷ்மீரில் வரும் 25ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட சட்டப் பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் வரும் 23ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ள நிலையில், அரசியல் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். 6 மாவட்டங்களின் 26 தொகுதிகளில் நடைபெற உள்ள 2ஆம் கட்ட தேர்தலில் போட்டியிடும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக, பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அமித் ஷா, பூஞ்ச், ரஜோரி, ஜம்மு மாவட்டங்களில் நடைபெற்ற இன்று பிரச்சாரப் பேரணியில் பங்கேற்றார். காங்கிரஸ் கட்சியின் திரு. ராகுல் காந்தி, தேசிய மாநாட்டுக் கட்சி தலைவர் திரு. ஃபரூக் அப்துல்லா ஆகியோரும், பல்வேறு இடங்களில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

------------------------------

*டெல்லி-பதவியேற்பு* (7)

டெல்லியின் முதலமைச்சராக இருந்த திரு.அரவிந்த் கெஜ்ரிவால் தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து, புதிய முதலமைச்சராக ஆம் ஆத்மி கட்சியின் திருமதி அதிஷி சிங், இன்று பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு, டெல்லியின் துணை நிலை ஆளுநர் திரு. வி.கே சக்சேனா பதவி பிரமானம் செய்து வைத்தார். புதிய முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்ட திருமதி அதிஷி சிங்குடன், 5 அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.

------------------------------

*விமானப் படை* (5)

இந்திய விமானப் படையின் துணை தளபதி ஏர் மார்ஷல் அமர் ப்ரீத் சிங், அடுத்த விமானப் படை தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளார். தற்போதைய விமானப் படை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் விவேக் ராம் சௌதாரியின் பதவி

காலம் இம்மாதம் 30ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ள நிலையில், இந்த நியமனம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

-----------------------------

*முருகன் (12)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி 3ஆவது முறையாக பொறுப்பேற்ற முதல் 100 நாளில், 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை மக்களுக்காக வழங்கி உள்ளதாக, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். இன்று தூத்துக்குடியில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், ஒரே நாடு-ஒரே தேர்தல், காலத்தின் கட்டாயம் என வலியுறுத்தினார். தமிழகத்தில் மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை பற்றி பட்டியலிட்ட அவர், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படும் தமிழக மீனவர்கள் உடனுகுடன் மீட்கப் படுவதாகவும், தமிழகத்தில் மட்டும், 11 நகரங்களில் எஃப் எம் வானொலி நிலையங்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளதாகவும், இந்த சந்திப்பின் போது, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறினார்.

-----------------------------

*தூய்மை தினம் 1 (17)*

சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை ஒட்டி, இந்திய கடலோர காவல் படை சார்பில், புதுச்சேரி கடற்கரை காந்தி சிலை அருகே, கடலோர துய்மைப் பணி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கலந்து கொண்டு, தூய்மைப் பணியை கொடியசைத்து துவக்கி வைத்து, மாணவ, மாணவிகளுடன் சேர்ந்து, கடற்கரையை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டார். அவருடன் உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணா மூர்த்தி, அரசு செயலர்கள், திருமதி பத்மா ஜெய்ஸ்வால் ரே, திரு. ஜெயந்த் குமார் ரே, காவல் துறை தலைமை இயக்குநர் திரு. அஜித் குமார் சிங்லா, இந்திய கடலோரக் காவல் படை கமாண்டன்ட் திரு. தசீலா, மற்றும், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு. கந்தசாமி ஆகியோரும் கலந்து கொண்டு, பள்ளி மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்ட மாணவ. மாணவிகள் உடன் இணைந்து கடற்கரை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இதேபோல், ஏனாம் பகுதியில் அம்பேத்கர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி சார்பில் நடைபெற்ற ராஜீவ் கடற்கரையை தூய்மைப்படுத்தும்

*தூய்மை தினம் 2 (7)*

பணியினை புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் கொடியசைத்து தொடக்கி வைத்து, மாணவ மாணவிகளுடன்

இணைந்து, தூய்மைப் பணியில் ஈடுபட்டார். ஒவ்வொரு மாதமும், ஏனாமில் உள்ள சுற்றுலா மையங்களில், தூய்மைப் பணியை மேற்கொள்ளுமாறு மாணவர்களை திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் மண்டல நிர்வாக அதிகாரி திரு. முனுசாமி, நகராட்சி ஆணையர் திரு. கந்தவில்லி ராமகிருஷ்ணா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

-----------------------------

*புதுச்சேரி-ஆதி திராவிடர்* (10)

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், நடப்புக் கல்வியாண்டில், மாணவ, மாணவிகளுக்கு, 49 கோடியே 90 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய், ஒதுக்கீடு செய்யப்பட்டு, வழங்கப்பட உள்ளதாக, அத்துறையின் இயக்குநர் திரு. இளங்கோவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு, பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 118 பயனாளிகளுக்கு மாநில அரசின் பங்காக, 1.88 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளதாகவும், திருமண உதவித் தொகையாக 396 பயனாளிகளுக்கு தலா 1 லட்சம் ரூபாய் வீதம் 3.96 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

-----------------------------

*புரட்டாசி சனிக்கிழமை* (7)

புரட்டாசி மாத முதல் சனிக்கிழமையை ஒட்டி, புதுச்சேரியில் உள்ள பெருமாள் கோவில்களில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு, வழிபட்டனர். புதுச்சேரி காந்தி வீதியில், மிகவும் பிரசித்தி பெற்ற நூற்றாண்டு பழமை வாய்ந்த வரதராஜ பெருமாள் கோவிலில் புரட்டாசி மாத முதல் சனிக்கிமையை ஒட்டி நடைபெற்ற சிறப்பு பூஜையில், ஏராளமான பக்தர்கள் துளசி மாலை சாற்றி நீண்ட வரிசையில் நின்று பெருமாளை தரிசனம் செய்தனர்.

-----------------------------

*இலங்கை-தேர்தல் (8)*

இலங்கையில் புதிய அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்குத் தொடங்கி, மாலை 4.30 மணி வரை நடைபெற்றது. 2022 பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு, இலங்கை தனது முதல் தேர்தலை நடத்துகிறது. 38 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் தற்போதைய அதிபர் திரு. ரணில் விக்ரமசிங்கே, எதிர்கட்சித் தலைவர் திரு. சஜீத் பிரேமதாசா, தேசிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் திரு. அனுரா குமார திஸ்ஸநாயக ஆகியோரிடையே கடும் போட்டி நிலவுகிறது. தேர்தலில் பதிவான வாக்குகள்

எண்ணப்பட்டு வரும் நிலையில், முடிவுகள் நாளை வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

-----------------------------

*கிரிக்கெட் (13)*

பங்களாதேஷ்க்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போடடியில் இந்தியாவின் ரிஷப்பந்த் ஆபாரமாக ஆடி, 109 ரன் குவித்தார். சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 3ஆவது நாளான இன்று, 3 விக்கெட் இழப்பிற்கு 81 ரன் என்ற நேற்யை ஸ்கோருடன் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி, 4 விக்கெட் இழப்பிற்கு 287 ரன் எடுத்துள்ளது. 515 என்னும் வெற்றி இலக்குடன் களம் இறங்கி ய பங்களாதேஷ் அணி, 4 விக்கெட் இழப்பிற்கு 158 ரன் எடுத்திருந்தது.

இந்திய ஆஸ்திரேலியா அணிகள் இடையே, 19 வயது உட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி, புதுச்சேரியில் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி, முதலில் பந்து வீச தீர்மானித்து, 49.4 ஓவரில், அனைத்து விக்கெட்டையும் வீழ்த்தி ஆஸ்திரேலிய அணியை 184 ரன்னுக்கு ஆட்டம் இழக்க செய்தது. 185 ரன் என்னும் இலக்குடன் தொடர்ந்து ஆடிய இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக, 3 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார்.

இந்தியா-பிரேசில் இடையே, எரிசக்தித் துறையில்,பரஸ்பர ஒத்துழைப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு-ஒரே தேர்தல், காலத்தின் கட்டாயம் என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தினார்.

சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை ஒட்டி, புதுச்சேரி கடற்கரையில் நடைபெற்ற தூய்மைப் பணியை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார்.